**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE OF UTHUKULI**

**OS 3-2020**

**PW-1**

**பெயர் :** சதிஷ்குமார்

**த/பெ :** கருப்புசாமி

**தேதி :** 13.03.2024

**<u>சத்தியபிரமாணத்தின் பேரில் வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

6. வாதிகள் கோரியுள்ள தாவா தடத்திற்கு இருபுறமும் எனது பூமி உள்ளது என்றால் சரிதான். எனது பூமிக்கு தென்புறம் போடப்பட்டுள்ள பாலம் கடந்த 2016ம் வருடம் அக்டோபர் மாதத்தில் கட்டி முடிக்கப்பட்டது என்றால் தெரியவில்லை. நான் கடந்த 2017ல் வாதி கோரியுள்ள தடம் ஆரம்பிக்கும் இடத்திலிருந்து, புறம்போக்கு இடத்தையும் சேர்த்து எனது பூமியுடன் இணைத்து கம்பிவேலி அமைத்துள்ளேன் என்றால் சரியல்ல. நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்த அறிக்கையில் மேற்புறத்தில் அமைக்கப்பட்டுள்ள கம்பிவேலி திறக்கப்பட்டுள்ளதாக கண்டுள்ளது என்றால் சரிதான். அதேபோல் அறிக்கையில் வாதிகள் தடம் கோரிய இடத்தில் 10 மற்றும் 20 அடி ஆழத்தில் குழி தோண்டி வைக்கப்பட்டுள்ளதாக கண்டுள்ளது என்றால் சரிதான், ஆனால் எனக்கு ஞாபகமில்லை.

7. ஆணையரின் அறிக்கையில் மேற்புறம் சுருட்டி வைக்கப்பட்ட கம்பிவேலி அருகில் JCB இயந்திரத்தை கொண்டு நிரவப்பட்டு பாதை அமைக்கப்பட்டதாக குறிப்பிட்டுள்ள நிலையில் நான் தாக்கல் செய்த ஆட்சேபனையில் அந்த பாதை எப்போது உருவாக்கப்பட்டது என்று சொல்லவில்லை என்றால் சரிதான். அதேபோல் நீதிமன்ற ஆணையர் தாவா சொத்திற்கு வருவதற்கு முன்பாக தான் பூமி நிரவப்பட்டு உழவு செய்யப்பட்டிருந்ததாக குறிப்பிட்டுள்ளார் என்றால் அது நான் ஓட்டிவரும் பூமி தான். நீதிமன்ற ஆணையரின் அறிக்கையில் எனது பூமிக்கு வடமேற்கு திசையில் உள்ள ஊத்துக்குளி – விஜயமங்கலம் செல்லும் ரோட்டில் இருந்து

புதியதாக எனது பூமிக்கு மண்பாதை அமைக்கப்பட்டதாக கூறியுள்ளார் என்றாலும் அதனை நான் ஆட்சேபிக்கவில்லை என்றாலும் சரிதான்.

8. தற்போது என்னிடம் காட்டப்படும் நீதிமன்ற ஆணையரின் வரைபடத்தில் நான் எனது எதிருரையில் கூறியுள்ள புறம்போக்கு தடத்தை காட்ட இயலுமா என்றால் ஆணையரின் வரைபடத்தில் தென்மேற்கு திசையில் இருந்து வருவதாக ரோஸ் நிறத்தில் காட்டப்பட்டுள்ள தடம் தான் புறம்போக்கு தடம் ஆகும். மேலும் ஆணையரின் அறிக்கையில் புதியதாக அமைக்கப்பட்ட 2 தடங்கள் மற்றும் உழவு பகுதி ஆய்விற்கு ஒரு நாள் முன்பு ஏற்படுத்தப்பட்டதாக குறிப்பிட்டுள்ள நிலையில் நான் அதை ஆட்சேபித்து மனு செய்யவில்லை என்றால் சரிதான். ஆணையரின் அறிக்கையில் வாதிகள் கோரியுள்ள கிழமேல் வண்டி தடம் முழுவதும் ஒரு நாளுக்கு முன்பாக உழவு செய்யப்பட்டதாக கூறியுள்ள நிலையில் அதை நான் ஆட்சேபிக்கவில்லை என்றால் சரிதான்.

9. நீதிமன்ற ஆணையர் வந்து பார்க்கும் போது வாதி கோரும் தடம் இருந்தால் எங்களுக்கு பாதகம் ஆகிவிடும் என்பதால் வாதியின் உரிமையை மறைப்பதற்காவும், நீதிமன்ற ஆணையரை ஏமாற்றுவற்காவும், மேற்கூறிய வாறு தடங்களை அமைத்து உழவு செய்துள்ளோம் என்றால் சரியல்ல. தாசில்தாரின் உத்திரவின் பேரில் எந்த காலைக்குண்டான புல வரைபடத்தில் மாறுதல் செய்யப்பட்டது என்று தெரிந்துகொண்டேனா என்றால் இல்லை, நான் அதை படித்து பார்க்கவில்லை. தாசில்தாரின் மேற்படி உத்தரவின் பேரில் இதுவரையில் நான் மேல்முறையீடு செய்யவில்லை என்றால் எனக்கு தெரியவில்லை. நான் இன்றுவரையில் மேற்படி உத்தரவை எதிர்த்து மேல்முறையீடு எதுவும் செய்யவில்லை என்றாலும், இவ்வழக்கிற்க்காக மேல் முறையீடு செய்ததாக பொய் உரைத்துள்ளேன் என்றால் சரியல்ல.

10. 1926ல் இருந்து மேற்படி புலவரைபடத்தில் தடம் இருந்தது எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியாது. என்னிடம் காட்டப்படும் பி.சா.ஆ.1 மற்றும் பி.சா.ஆ.2 ஆவணங்கள் யாருடையது எதற்காக இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டது என்று தெரியுமா என்றால் தெரியாது. வாதிகள் சொல்வதுபோல்

தடம் இல்லை என்று காட்டுவற்கு வருவாய் துறை ஆவணங்கள் எனது தரப்பில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எங்களது பூமியில் உள்ள தடத்தின் காரணமாக எங்களது பூமியின் விலை குறைந்துவிடும் என்பதால் அதனை கம்பி வேலி போட்டு மறைத்து விட்டோம் என்றால் சரியல்ல.

11. ஏற்கனவே 06.11.2017 மற்றும் 11.12.2017 தேதிகளில் தாவா சொத்து மற்றும் பூமியை அளப்பதற்காக இரு முறை அறிவிப்பு அனுப்பபட்டது என்றாலும், அதனை சண்முகன் மட்டும் பெற்றுகொண்டார் என்றாலும் நாங்கள் அதை வாங்க மறுத்து திருப்பப்பட்டது என்றாலும் எங்களுக்கு அவ்வாறு எந்த அறிவிப்பும் வரவில்லை. இன்றுவரையில் எனக்கும் 2ம் பிரதிவாதி சண்முகனிற்க்கும் பேச்சு வார்த்தை உள்ளது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் ஆட்சேபிணை சண்முகனால் கொடுக்கப்பட்டது என்றால் எனக்கு தெரியவில்லை. 91/1 காலையில் உள்ள தடத்தை வாதிகள் பயன்படுத்துவது சம்மந்தமாக எனக்கு ஆட்சேபிணை எதுவும் இல்லை என்றால் உள்ளது.

12. தெற்கு வேலிக்கு ஓரமாக தடம் இருப்பதாக கூறியுள்ள நிலையில் மேற்படி தடம் எங்கு ஆரம்பித்து எங்கு முடிகிறது என்று எனது பிரமாணவாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். ஆணையரிடம் அந்த தடத்தை காண்பித்தேனா என்றால் காண்பித்தேன். அவ்வாறு நான் காண்பித்திருந்தால் ஆணையரின் அறிக்கையில் அந்த தடம் இடம் பெற்றிருக்கும் என்றாலும், நான் அவ்வாறு எந்த தடத்தையும் ஆணையரிடம் காண்பிக்கவில்லை என்றால் சரியல்ல. வாதி கோரும் பரிகாரம் அவருக்கு கிடைக்கதக்கது என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியிடம் கையெழுத்து பெறப்பட்டது.

மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும் நீதித்துறை நடுவர்,
ஊத்துக்குளி.